ஊழலுக்கெதிரான தேசிய நேர்மை விருதுகளை வென்றோர் மற்றையவர் களுக்கு முன்மாதிரியாக உள்ளனர்.

தொடர்ந்தும் 4வது ஆண்டாக டிரான்ஸ்பேரண்ஸி இன்டர்நேஷனல் **(TISL)**, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் 2007 டிசம்பர் 9ந் திகதி ஐ.நா. சர்வதேச ஊழலுக்கெதிரான தினத்தை நினைவுகூர்ந்தது. இந்நிகழ்வின் பிரதம அதிதி நேர்மையின் தெட்டத் தெளிவான தோற்றமாக விளங்கும் கலாநிதி கிரண் பேடி ஆவார். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளர் நீதவான் அமீர் இஸ்மாயில் கௌரவ அதிதி ஆவார். சிறப்பதிதியாக பொலன்னறுவை திம்புலாகலயின் நவகிரிதமர மகா வித்தியாலயத்தின் முதன்மை மாணவி செல்வி ரண்மெனிக்கெ அதிகாரி கலந்து கொண்டார்.

தேசிய நேர்மை விருதுகளின் **(NIA)** பிரதான குறிக்கோள், ஊழலுக்கெதிராகப் போராடும் பல தனிப்பட்டவர்களின் தைரியத்தையும் தளரா முயற்சியையும் அங்கீ கரிப்பதுடன், ஊழலுக்கெதிரான இயக்கத்துக்கு தூண்டலை ஏற்படுத்தும் வளமாக அவர்களை அங்கீகரித்துக் கொள்வதுமாகும். தமது உத்தியோக பூர்வமான நிலையிலும் தனிப்பட்ட ரீதியிலும் பலவாறான அச்சுறுத்தல்களுக் கிடையிலும் அவ்வாறானவர்கள் முக்கியமான பங்கை ஆற்றுகின்றனர்.

'*தொழில்களுக்கு கோரிக்கை விடுப்பதற்குப் பதிலாக மக்கள் வீதிகளில் இறங்கி ஊழலுக்கு முடிவுகட்டும்படி வேண்டுகோள்விடுக்க வேண்டும். ஊழலில்லாத நாடு ஒன்று எமக்கு இருக்குமானால், கூடுதலான தொழில் வாய்ப்புக்களை மக்கள் அனுபவிக்கலாம்*' என்றார் 2007ன் தேசிய நேர்மைக்கான விருது பெற்ற திரு. எஸ் கே. லியனகே. சிவில் சேவை ஊழியராக 33 ஆண்டுகள் ஊழலுக் கெதிராகப் போராடிய அவரது அர்ப்பண சிந்தையை அங்கீகரிக்கும் முகமாக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

திருமதி ஷாமலா தர்ஷினி பெர்ணாந்து; இலங்கை துறைமுக அதிகார சபையில் ஊழலுக்கெதிராகப் போராடியமைக்காக இந்த ஆண்டின் தேசிய நேர்மைக்கான விருது விசேடமாகக் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டது.

வெற்றி பெற்றவர்கள், தமது விருதுகளை கலாநிதி கிரண் பேடியிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இவர் இந்தியாவின் சிறைச்சாலை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக பதவியுயர்வு பெற்ற முதலாவது பெண் பொலீஸ் அதிகாரியாவார். 1994ல் ஆசியாவின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் *ராமொன் மக்ஸஸாய்* விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

'*இலங்கையில் தகவலுக்காகப் போராடும் இயக்கமொன்றை உருவாக்கியிருப்பது ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முதலாவது படியாகும். இதற்காக சிவில் சமூகங்களும் தலைமையை வகிக்க வேண்டும்*' என கலாநிதி பேடி வலிறுத்தினார். விருதுகளை வென்றோர் ஊழலுக்கெதிரான தமது போராட்டத்தை தொடரவேண்டும் என தமது உரையில் கலாநிதி பேடி வற்புறுத்தினார். '*பெண்களும் குழந்தைகளுமே ஊழலினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்*' என்று கலாநிதி பேடி தொடர்ந்தும் உரையாற்றினார்.

இலங்கைச் சிவில் சமூகத்தின் தலைவர்களைப் பலம் வாய்ந்த இயக்கமொன்றை உருவாக்கு மாறும் அவர் வேண்டிக் கொண்டார்.அத்துடன் இலங்கையானது 6 *ராமொன் மக்ஸஸாய்* விருது வென்றவர்களை உருவாக்கியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

**TISL** ன் நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு ஜே.சீ. வெலியமுன அவர்கள் குறிப் பிடும் போது, *'டிரான்ஸ்பேரண்ஸி இண்டர்நேஷனல், 2007ன் தேசிய நேர்மை விருதுக்காக 53 விதப்புரைகளைப் பெற்றது எனவும், வெற்றி பெற்றோர், சுதந்திரமான நடுவர் குழுவினால் வெளிப்படையான செய்முறையில் தெரிவு செய்யப்பட்டனர்* எனக் குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தின் போது 2007க்கான நல்லாட்சியின் படிநிலை குறித்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. **TISL** ன் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ரூஷான நாணயக்கார அவர்கள், '*இவ்வகையான படிநிலை அறிக்கை TISL வெளியிடுவது இதுவே முதல் தடவை எனவும் எதிர்காலத்தில் இது வருடாந்த நிகழ்வாக மேற்கொள்ளப்படும்'* எனவும் விளக்கினார். குறிப்பாக 2007 ஆண்டு தொடர்பான நல்லாட்சி விடயங்களை இந்த அறிக்கை முன்னறுத்திக் காட்டுகிறது.

சர்வதேச ஊழலுக்கெதிரான தினத்தைக் குறிக்கும் முகமாக **TISL** ஆனது சிறுவர்களை விசேட நோக்காகக் கொண்ட சிறப்பு நிகழ்ச்சிகளும் நடாத்தப் பட்டன. இதன் நோக்கம், வயது வந்தவர்களைப் போலவே *சிறுவர்களையும்* - எதிர்கால வயது வந்தோர் - ஊழல் தொடர்பான விடயங்களையும் தமது தனித் துவத்தைப் பேணியவண்ணம் 'கௌரவமான இலங்கைப் பிரசைகளாக' நேர்மை யாக வாழ்வதன் மூலம் வயதுவந்தோரிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக கூருணர்வு மிக்கவர்களாக்குவதாகும். சிறுவர் உரிமைகளுக்கான சர்வதேச உறுதிப்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சாரிக்கா மாறசிங்கவினால் இந்நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டது. ஐந்து மாகாணங்களைச் சேர்ந்த 53 மாணவர்கள் தமது 750 சகமாணவர்களைப் பிரதிநிதித்துவம் செய்தவாறு நேர்மைத்திறனுக்காக தமது கருத்துக்களை முன்வைத்துனர். நேர்மைத் திறனுடன் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அவர்களது கருத்துக்கள் வயது வந்தோர்களினதும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினதும் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டன.

பலதரப்பட்ட பின்னணிகளைச் சார்ந்த ஏராளமானோர் இரு வைபவங்களிலும் கலந்து சிறப்பித்தனர். அரச சேவை, பாரிய நிறுவனங்கள், ஊடகங்கள், சமூக அடிப்படையிலான அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங் கள், மதகுருமார் போன்றோரை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்தனர்.

மாலை நேர செயலமர்வுகளில் பங்கேற்றவர்கள், வைபவத்தின் இறுதியில் '*தேசிய நேர்மைச் சத்தியப்பிரமாணத்தை*' எடுத்துக்கொண்டனர்.

‘தேசிய நேர்மைச் சத்தியப்பிரமாணமானது’ இந்த ஆண்டின் ஐ.நா ஊழலுக்கெதிரான தினத்தை நினைவு கூறுவதற்காக நடாத்தப்பட்ட தேசிய நேர்மைச் சத்தியப் பிர மாணப் போட்டிக்கு முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையிலிருந்து உருவாக்கப்பட்டது.

ஆசிரியர்களுக்கான குறிப்புக்கள்:

டிரான்ஸ்பேரண்ஸி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்காவானது **(TISL)**, ஊழலுக்கெதிரான முன்னணி வகிக்கின்ற சர்வதேச டிரான்ஸ்பேரண்ஸி இன்டர்நேஷனல் **(TISL)**ன் தேசிய அமைப்பாகும். இது ஊழல் அச்சுறுத்தலுக்கெதிராகப் போராடும் 90 சர்வதேச அமைப்புக்களில் ஒன்றாகும்.

டிரான்ஸ்பேரண்ஸி இன்டர்நேஷனல், ஆனது, ஊழலுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுப்புச் செய்கின்ற உலக சிவில் அமைப்பு என்பதுடன் இந்த உலகெங்கணும் உள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஊழலுக்கு முடிவுகட்டுவதற்காக பலம் வாய்ந்ததும் பரவலானதுமான கூட்டமைப்புக்காக மக்களை ஒன்று சேர்ப்பதுமாகும்.

**TI** யின் செயற்பணியானது ஊழல்களற்ற உலகொன்றுக்கான மாற்றத்தை உருவாக்குவதாகும்.

**TISL** தொடர்பான மேலதிகத் தகவல்களை பெறக்கூடிய இணையதள முகவரி: http://www.tisrilanka.org